REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 3உ திங்கள் (19—9—55) ★ ★ வெளியீடு: புரட்டாசி 4உ செவ்வாய் (20—9—55) [இதழ் 83

நல்ல யோசனைதான்; ஆனால்...!

" அபிவிருத்தித் திட்டங்கள் நீட்டிலையில் கோதாவரி நதியை மறந்துவிட முடியாது; கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பெண்ணாறு ஆகியவற்றைச் சேர்த்தும் ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றினால் தென்னாடு முழுவதையும் ஒரு சொர்க்கமாக்கிவிடலாம்;

" இந்த விரிவான நதிப் பன்னைத்தாக்குத் திட்டத்திற்குச் சுமார் ரூ. 200 கோடி வரையில் செலவாகலாம்; இந்தத் திட்டத்தில் தமிழர்கள், ஆந்திரர்கள், மற்றவர்கள் எல்லாம் அக்கரை காட்டுகின்றனர்,"

—என்று, இராசமகேந்திரபுரத்தில் ஆந்திர உதவி முதன் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

'தட்சிணப் பிரதேச கோரிக்கையை ஆதரிக்கமாட்டோம்'

'திராவிட நாடு அமைக்காமல் சாகமாட்டோம்'

ஆண்டு விழாக் கூட்டத்தில் அண்ணாதுரை முழக்கம்

"அண்மையில் 'தட்சிணப் பிரதேசம்' என்ற ஒரு அமைப்புப் பற்றி சிலர் பேசி வருகிறார்கள்; மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், நமது 'திராவிட நாடு' கோரிக்கையும், 'தட்சிணப் பிரதேச' அமைப்பும் ஏறத்தாழ ஒன்றுதானே—என்று சிலருக்குத் தோன்றலாம்;

"நமது 'திராவிட நாடு' என்பதைத்தான், அவர்கள், சவமொழியில், 'தட்சிணப் பிரதேசம்' என்று கூறுகிறார்களோ என்று கூடச் சிலருக்குத் தோன்றலாம்;

"வீடுகளில் தாய்மார்கள், அரிசி மாவு அரைத்துப் புளிக்க வைத்து, இட்டிலி சுடுவர்—நாம் உண்பதற்கு;

"குழந்தைகள் தெருத் திண்ணையிலும், வாயிற்படியிலும் கூடிக்கொண்டு, தாங்களும் இட்டிலி சுடப்போவதாகக் கூறி, தெரு மண்ணை அள்ளி நீரைத் தெளித்துப் பிசைந்து, கொட்டாங்கச்சியில் நிரப்பி, தரையில் கவிழ்த்து மண் இட்டிலி சுடுவர்—விளையாடுவதற்காக!

"நாம் கேட்கும் திராவிட நாடு, 'வீட்டில் உண்பதற்காகத் தாய்மார் தயாரிக்கும் இட்டிலிக்குச் சமமானது' என்றால், அவர்கள் கோரும் 'தட்சிணப் பிரதேசம்', தெருத் திண்ணையில், விளையாட்டிற்காகக் குழந்தைகள் மண்ணினால் தயாரிக்கும் கொட்டாங்கச்சி இட்டிலிக்குச் சமமானதாகும்.

"எனவேதான், தி.மு.கழகம், 'தட்சிணப் பிரதேச'க் கோரிக்கையை மதிக்கவில்லை—ஆதரிக்கவில்லை;

"நாம் தனி நாடு கேட்கிறோம்—நமது தந்தையர் நாட்டை—தாயகத்தை—'தன்மானத்தை மீட்க வேண்டும்' என்று போரிட்டு வருகிறோம்;

"தட்சிணப் பிரதேசம் கோருவோர், 'தாசர்களுக்குள்ளே, ஒரு ஒப்பந்தம் தேவை' என்கிறார்கள்; உத்தியோக வேட்டைக்கு இடம் தேடுகிறார்கள்; நிர்வாகத்திற்கு ஒரு இயந்திரம் அமைக்க விரும்புகிறார்கள்;

"எப்படி, திராவிடத் தனியரசு கோரும் நாம், 'தட்சிணப் பிரதேசம்' கோருவோரது கூற்றை மதிக்க முடியும்?

"நாம் தாழ்ந்துவிட்டிருக்கிறோம்; தாயகம் அடிமைப் பட்டுக்கிடக்கிறது; அன்னியனின் தாளைத் தொட்டறியாத வரலாற்றைப் பெற்றுள்ள தாயகம்—திராவிடம், இன்று வடவரின் பிடியிலிருக்கிறது; அந்த நிலை மாறவேண்டுமென நாம் விழைகிறோம்—போராடுகிறோம்;

'ஆனால், 'மேயர்' சிதம்பரங்களோ, நுனிப் புல் மேய்கின்றனர்—'தட்சிணப் பிரதேசம்' கோருகின்றனர்;

"நாம் திராவிடம் கேட்பது, மேயர் சிதம்பரம் போன்ற மாளிகைவாசிகளுக்கல்ல; மண்குடிசையில் புழுக்களாய் வாழும் மனிதர்களுக்கு—அவர்களின் நல்வாழ்விற்கு—அவர்களின் தன்மான மீட்சிக்காகத் திராவிடம் கோருகிறோம்;

"மண்குடிசையில் வாழ்பவரின் விடுதலைக்கு மாளிகை வாசிகளும், அவர்களின் திட்டங்களும் நிச்சயம் பயன் பட முடியாது;

"எனவேதான் கூறுகிறேன்—'தட்சிணப் பிரதேச' அமைப்பை தி. மு. கழகம் ஆதரிக்காது—என்று!

"அவர்கள் கோரும் 'தட்சிணப் பிரதேசம்' அமையப் போவதுமில்லை; நாம், தனித் திராவிடம் அமைக்காமல் சாகப் போவதுமில்லை,"

—என்று, அண்ணா அவர்கள், சென்னை-பெரம்பூர் ஏரி மைதானத்தில் நடைபெற்ற தி. மு கழக ஏழாவது ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அண்ணா அவர்கள், மாநில மாநாட்டிற்கு நிதி தந்த இரயில்வே தொழிலாளர்களையும், இதர தொழிலாளர்களையும் பாராட்டினார்.

கழகச் சார்பில் உளங் கனிந்த நன்றியறிதலைத் தொழிலாளர்களுக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து, திராவிட நாடு பிரிய வேண்டியதின் காரண காரியங்களை விளக்கமாக எடுத்துக் காட்டி, கடந்த காலத்தில் தி. மு. கழகம் ஆற்றியுள்ள பணிகள் எதிர்காலத்தில் நாம் ஆற்றவேண்டிய பணிகளைத் திறம்படச் செய்ய உற்சாகம் ஊட்டவல்லன என்றும் குறிப்பிட்டார்.

டிரைவர்கள், கண்டக்டர்கள்

பஞ்சமாம்!

லண்டன், செப். 18—

மாஞ்செஸ்டர், லண்டன் ஆகிய இடங்களில் பஸ் டிரைவர்கள், கண்டக்டர்கள் ஆகியோருக்குப் 'பஞ்சம்' ஏற்பட்டுள்ளதாம்! மாஞ்செஸ்டரில் மட்டும் 300 பேர் தேவையாம்!

லண்டன் பஸ் போக்குவரத்தில் 55,000 பேர் வேலை செய்கின்றனர்; எனினும், மேலும் 33,00 பஸ் டிரைவர்கள், கண்டக்டர்கள் தேவைப்படுகின்றனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

"1955 ஜூலை 1-ந் தேதிக்கும் 1956 டிசம்பர் 31-ந் தேதிக்கும் இடைப்பட்ட காலத்திற்கு ஐ நா. சர்வதேசக் குழந்தைகள் அவசர நிதிக்கு அமெரிக்கா 1,45,00,000 டாலர் கொடுக்கும்," என்று, அமெரிக்காவின் ஐ நா. பிரதிநிதி அறிவித்தார்.

சென்னையில் திராவிட நாடு பிரிவினை வார விழா

மாபெரும் ஊர்வலம்—மகத்தான மக்கள் கூட்டம்

இரயில்வே தொழிலாளர்கள் நிதியளிப்பு

சென்னையில் திராவிட நாடு பிரிவினை வாரமும், தி. மு. கழக ஏழாம் ஆண்டு விழாவும், இரயில்வே தொழிலாளர் சார்பில் மாநில மாநாட்டு நிதியளிப்பும் சிறப்புற நடைபெற்றன.

சென்னை நேப்பியர் பார்க்கிலிருந்து பகல் 3-மணியளவில் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் பல வட்டங்களிலிருந்தும் கழகக் கொடிகளுடன்—பல்லாயிரம் மக்கள் புடைசூழ ஊர்வலத்தில் பங்கு பெற்றனர்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக இலட்சிய முழக்கம் செய்து கொண்டு சென்ற அந்த ஊர்வலத்தை, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமை தாங்கி நடத்திச் சென்றார்.

ஊர்வலம் பெரம்பூர் ஏரி மைதானத்தை அடைந்தது.

அங்கு சுமார் 6-40 மணி அளவில் துவங்கிய பொதுக்கூட்டத்திற்கு தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ. அவர்கள் தலைமை தாங்கி சிறிதுநேரம் நாட்டு நிலைகள் பற்றிப் பேசினார்.

அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் நமது கழகத்தின் ஆறாண்டு கால பணிகளையும், இலட்சியமான திராவிட நாடு குறித்தும் விளக்கம் தந்தார்.

பின்னர், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து தோழர் மூவை ஆர்.

(4-ம் பக்கம் பார்க்க)

மணப் பெண்ணை விலைக்கு விற்கும் கொடுமையை ஒழிக்க முயற்சி!

ஆந்திர சட்ட சபையில் மசோதா

கர்னூல், செப். 18—

ஆந்திர மாநிலத்தில், 'வரதட்சிணை' வழங்கும் முறையைத் தடை செய்வதற்காக—'வரதட்சிணை தருவதும், வாங்குவதும் தண்டனைக்குரிய குற்றங்கள்' எனக் கூறும் அதிகார பற்றற்ற மசோதா ஒன்று, வரும் 24-ந் தேதியன்று சட்டசபை விவாதத்திற்கு வரவிருக்கிறது.

'1955-ம் வருடத்திய, ஆந்திர வரதட்சிணை ஒழிப்பு மசோதா' என்று அழைக்கப்படும் இந்த மசோதாவை, ஏ. காளேசுவர ராவ் என்ற காங்கிரஸ் உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க.)

தஞ்சை மாணவர்கள் பட்டினிப் போர் தொடுப்பர்!

" தஞ்சை கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், 'தலைமையாசிரியராக இருந்து விலக்கப்பட்ட வி. சாரங்கபாணி என்பவரை மீண்டும் தலைமை ஆசிரியராக்க வேண்டும்,' என்று கடந்த ஜூலை முதல் கோரி வருகின்றனர்;

"அவர்களுக்கு, பெற்றோர்கள், பல சங்கங்கள் ஆகியவற்றின் ஆதரவு இருக்கின்றது; முதல் மந்திரி, கல்வி இலாகா தலைமை அதிகாரி ஆகியோருக்கு கோரிக்கை பற்றி எடுத்துரைத்தும், இதுவரை கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை;

"எனவே, வரும் 1955 அக்டோபர் 4-ந் தேதி முதல் மாணவர்கள் சாகும்வரை பட்டினிப் போரில் ஈடுபடுவது—என்று முடிவு செய்திருக்கின்றனர்; கோபால், நடராசன் என்ற இரு மாணவர்கள், முதலில் சாகும்வரை உண்ணாமலிருக்க முற்படுவர்; மேலும் பல மாணவர்கள் அவர்களைத் தொடர்ந்து தங்கள் கோரிக்கை ஈடேற்றத்திற்காகப் போரில் ஈடுபட சம்மதம் தெரிவித்திருக்கின்றனர்,"

என்று, தஞ்சை மாணவர் சங்கச் செயலாளர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—29/55

பொறுப்புக்கள் பகிர்வு

✶

தலைமைக் கழகப் பொறுப்புக்கள் கீழ்க்கண்டவாறு பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகிய இருவராலும் பகிர்ந்துகொள்ளப்பட்டுச் செயலாற்றப் பெறும்:—

பொதுச்செயலாளர் ஏற்று நடத்தும் பொறுப்புக்கள்:

தலைமை நிலையம்	நிதி வரவு-செலவு
'நம் நாடு' இதழ்	கொள்கைப் பரப்பல் (பிரச்சாரம்)
கொள்கை—திட்டம்	கலைத் துறை
பொதுக் குழு	

★

துணைப் பொதுச்செயலாளர் ஏற்று நடத்தும் பொறுப்புக்கள்:

சட்ட திட்டம்	கழகத் தேர்தல்
உறுப்பினர் சேர்த்தல்	மாநாடு அமைப்பு
கிளைக் கழக அமைப்பு	தொழிற் சங்க அமைப்பு

'அறிவகம்', சென்னை-13
19—9—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—9—'55 திங்கள்

உறங்குவோர் விழிக்கட்டும்!

"சென்னை முதன் மந்திரி காமராசர் டில்லி சென்றிருந்த போது, 'இந்தியாவில் நான்காவதாகத் துவங்கவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைத் தென்னாட்டில்—சென்னை மாநிலத்தில் துவக்குங்கள்,' என்று இந்திய சர்க்காரிடம் கேட்டார்;

"இந்திய சர்க்கார் அதிகாரிகள் காமராசரின் கோரிக்கையைப் பரிசீலித்து வருகின்றனர்; சென்னைக்குச் சாதகமாகவே அவர்களின் பரிசீலனை இருக்கக்கூடும்;

"சென்னையில் அந்தத் தொழிற்சாலை நிச்சயமாகத் துவங்கும் என்று காமராசர் மனதார நம்புகிறார்."

இப்படியெல்லாம், இரண்டு கிழமைகளுக்குமுன் செய்திகள் வந்தன.

'கோரியிருக்கிறேன்'—என்று டெல்லியிலும், 'நம்புகிறேன்' — என்று சென்னையிலும் காமராசர் தெரிவித்தார்.

நாட்டவரும் நினைத்துக் கொண்டிருந்தனர்—'சென்னையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமையும்'—என்று!

'முதன் மந்திரியே நம்புகிறாரே, நாம் நம்பக் கூடாதா?' என்றும் சிலர் எண்ணியிருக்கக் கூடும்.

காமராசருக்கு டில்லி மேலிடத்தில் புதிய செல்வாக்கு இருக்கிறது. 'ஆவடி' நடத்தியவராயிற்றே—காமராசர்! அது என்ன சாதாரண காரியமா?

மேலும் தென்னாட்டில், வடநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராகத் திரண்டிருக்கும் விடுதலைச் சக்தி வேறு இருக்கிறது—அதைச் சுட்டிக்காட்டி, சலுகைகள் பெற! ஏற்கனவே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு வஞ்சிக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டுபவரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. இரண்டாம் திட்டத்திலும் சென்னை கேட்டது ரூ. 400 கோடி—தரப்பட்டதோ ரூ. 200 கோடி! ஆந்திரம் கேட்டது ரூ. 225 கோடி—தரப்பட்டதோ ரூ. 115 கோடி! இப்படி இரண்டாம் திட்டத்திலும் தென்னாட்டிற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பங்கு தரப்படவில்லை; இந்த நிலை பிறப்பிக்கிற புதிய எதிர்ப்புச் சக்திகளையும் காமராசர் சுட்டிக் காட்டியிருக்கலாம். வடநாட்டவரும், எத்தனை முறைதான் 'இல்லை' என்ற பதிலைத் தருவார்கள்? அவர்களுக்கே சங்கடமாயிருக்காதா? அதனால்தான் போலும்—காமராசர், 'எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை வேண்டும்,' என்று கோரிய போது, 'சாதகமான பதில் அதற்குக் கிடைக்கும்,' என்று நம்பி இருக்கிறார். 'அப்படித் தொழிற்சாலை இங்கு அமைந்துவிட்டால் வடநாடு—தென்னாடு என்று பிரித்துப் பேசுபவர்களின் வாயை அடக்கிவிடலாம்; நாம் இன்னுங்கொஞ்சம் தீவிரமாக, இந்தப் பிரிவினை கோருவோரைத் தாக்கிப் பேசமுடியும்,' என்று சில அகில இந்திய அரசியல்வாதிகள், கடந்த இரு கிழமைகளுக்கு முன்வந்த செய்தி கேட்டு எண்ணிக் கொண்டிருந்திருக்கக்கூடும்; ஆனால், அவர்கள் எண்ணத்தில் மண் தூவியிருக்கிறது—டெல்லி மக்கள் சபையில் தரப்பட்டிருக்கும் பதில் ஒன்று!

"சென்னையில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையா? முதன்மந்திரி காமராசர் கோரினாரா? நம்புவதாகத் தெரிவித்தாரா? எனக்கொன்றும் தெரியாதே!"

என்று, மக்கள் சபையில், உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்திய சர்க்காரிடம் கோரினேன் — பரிசீலிப்பதாகச் சொன்னார்கள்; நமக்குச் சாதகமான முடிவு கிடைக்கலாம்; நிச்சயமாக நம்புகிறேன்; என் கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்' என்று" — இப்படிக் காமராசர் கூறியிருக்கிறார், டெல்லியிலும், சென்னையிலுமாக!

தென்னாட்டுப் பத்திரிகைகள் மட்டுமின்றி வடநாட்டு பத்திரிகைகளும், காமராசரின் கோரிக்கையையும், நம்பிக்கையையும் பெரிய எழுத்துக்களில் பிரசுரித்தன.

ஆனால்......? டில்லி மந்திரி, 'அப்படி ஒரு கோரிக்கை எங்களுக்கு வரவும் இல்லை; காமராசர் கோரியிருப்பதாக அறிவித்திருப்பது பற்றியும் எனக்குத் தெரியாது,' என்கிறார்.

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? நாட்டு மக்கள் எதை நம்புவது? யார் சொல்லுவதை நம்புவது? காமராசரையா, அல்லது, டில்லி மந்திரியையா?

அல்லது, "காமராசர் எண்ணெய்த் தொழிற்சாலை வேண்டுமென்று கோருகிறார்; அதற்காக அவர் எடுத்துக் காட்டுகிற காரணங்களும் உண்மை நிலையை ஒட்டியதாயும், நியாயமானதாயும் இருக்கின்றன; இப்படிப்பட்ட கோரிக்கையை எப்படி மறுத்துரைப்பது? ஏற்கனவே நம்மீது தென்னாட்டவர் வெறுப்படைந்திருக்கின்றனர்; எனவே, இந்த முறையும் 'இல்லை' என்று சொன்னால் வெறுப்பு வேகமாக வேறு ஒரு 'உருவம்' பெறக்கூடும்; எனவே, 'கோரிக்கையே வரவில்லை' என்று சொல்லிவிட்டால்!"—இப்படி நினைக்கின்றனரா, டில்லி ஆட்சியாளர்கள்? அல்லது, உற்பத்தி மந்திரி ரெட்டியே தெரிவித்திருப்பதைப்போல், 'ஒரு எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவ சௌராட்டிரம் அனுப்பியுள்ள கோரிக்கையை ஏற்றுக் கொள்வது,' என்று, ஏற்கனவே டில்லி ஆட்சியாளரால் முடிவு செய்யப் பட்டுவிட்டதா? அல்லது, 'உற்பத்தி மந்திரி இப்படிப் பதில் சொல்லியிருப்பதின் உண்மையான காரணந்தான் என்ன?'—என்பதை 'ஏக இந்திய' மயக்கத்திலிருப்பவர்கள், சிந்தித்து அறிய முற்பட்டாக வேண்டும்.

கோருவதும், நம்புவதுமாக—பின்னர், நம்பிக்கை நாசமானதும், 'கிடைத்ததே போதும்' என்று கூறுவதுமாகக் காலந்தள்ளும் மந்திரிகளைக் கண் திறந்து பார்க்க, இந்த நாட்டில் இன்னும் உறங்கிக்கொண்டிருப்பவர்கள் விழிந்தாக வேண்டும்!

ஆட்சி முறையில் புரட்சி ஏற்பட்டதேன்?

மன்னருடன் மந்திரிகளும் மதோன்மத்தர்களாயினர்

மக்களை அலட்சியம் செய்தனர்; கோடீசுவரர்களாக மாறினர்!

"மன்னரும், நிலச்சுவான்தார்களும் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டனர்; மன்னர் தன்னுடைய நலனைத்தான் முக்கியமாகக் கருதினர்; அவருடைய அமைச்சர்கள் சில ஆண்டுகளில் கோடீசுவரர்களாயினர்; மக்களை அவர்கள் அலட்சியம் செய்தனர்; ஆகவே, ஆட்சி முறையில் புரட்சி ஏற்பட்டது,"

என்று, எகிப்தின் துணைப் பிரதமர் கமால் சலேம் அவர்கள், ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழக மாணவர்கள் கூட்டத்தில், எகிப்தின் பிரதமராக இருந்த ஜெனரல் நகிப், அதிகாரத்திலிருந்து வீழ்ச்சியடைந்த வரலாற்றையொட்டிப் பேசுகையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் நகீபைப் பற்றி அவர் கூறியதாவது:—

"ஜெனரல் நகீபுடன் 18 மதம் ஆட்சிப் பொறுப்பைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கு உண்மையான நிலைமை தெரியும். ஜெனரல் நகீபுடன் ஒத்துழைப்பது மிக்க சிரமமாக இருந்தது; முன்னாள் அரச குடும்பத்தினருடனும், நிலச்சுவான்தாரர்களுடனும், பிரிட்டிஷ்காரர்களுடனும் அவர் நட்பாக இருந்தார்; கம்யூனிஸ்டுகளுடன் அவர் தொடர்பு வைத்திருந்தார்; முஸ்லிம் சகோதரத்துவக் கட்சிக்காரர்களுடனும் அவர் நட்புகொண்டார். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமற் போகவே, அவர், தன்னுடைய கட்சியின்மீது பழி சுமத்தினர்,"

லோகியா நம்பிக்கை

தென்னாட்டில் ம. சோ. கட்சி ஒழிந்துவிடுமாம்!

அடுத்த அக்டோபர் அல்லது நவம்பரில், தன்னுடைய சோஷலிஸ்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டவுடன், தென்னாட்டில் ம. சோ கட்சி அடியோடு ஒழிந்துவிடுமென்றும், வட இந்தியாவில் ஓராண்டிற்குள் இந்த நிலை உருவாகலாமென்றும் டாக்டர் லோகியா கூறியுள்ளார்.

ம. சோ. கட்சியிலுள்ள உறுப்பினர்களில் 60 சதவிகிதத்தினர் தன்னுடன் சேர்ந்துவிடுவார்கள் என்றும், மொத்தம் 1,200 ம சோ. கட்சிகுழுக்களில் 250க்குமேற்பட்ட குழுக்கள் புதுக் கட்சியை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனவென்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்க்கார் ஊழியர்கள் வாழ்க்கை வசதி

சீன சர்க்கார் சிப்பந்திகளுக்கு இதுவரையில், அவர்களுடைய சம்பளத்தில் ஒரு பகுதி ரொக்கமாகவும், மற்றொரு பகுதி குடியிருப்பு வசதி—துணிமணிகள் — மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும் அளிக்கப்பட்டு வந்தன; இனி அம்முறையில்லாமல், அவர்களுடைய ஊதியம் ரொக்கமாகவே தரப்படும்.

இதன்மூலம், சர்க்கார் ஊழியரின் வாழ்க்கைத் தரம் உயரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்திய சர்க்கார் ஆலை அரசர்களின் 'கைப் பொம்மை' ஆகிறது!

கைத்தறிகளால் 'தேவைகளை'ப் பூர்த்தி செய்ய முடியாதாம்!

புதுடில்லி, செப். 16—

"மில்களில் ஆண்டிற்கு 500-கோடி கெஜம் துணிதான் உற்பத்தி செய்யப்படவேண்டும்; 1955 – 56-க்குப் பிறகு, அதற்கு மேல் அதிகமாகத் தேவையாக உள்ள துணிகள் கைத்தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்பட வேண்டும்,"

என்று, தனிப்பட்ட உறுப்பினரொருவர் கொண்டு வந்த தீர்மானம் ராஜ்யங்கள் சபையில் நிராகரிக்கப்பட்டது.

கைத்தொழில் இலாகா மந்திரி நித்தியானந்த கனுங்கோ, சர்க்கார் சார்பில் தீர்மானத்தை எதிர்த்தார் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் போதிய அளவு நூல் கிடைக்குமென்பது நிச்சயமாயில்லையென்றும், மலிவான விலையில் கைத்தறித் துணி உற்பத்தி சாத்தியமில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

"மில்களை நம்பியிருப்பதற்குப் பதிலாக ரூ. 15 கோடி மூலதனத்தில் அம்பர் சர்க்காக்களை உபயோகித்தால் சுமார் 50 இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும்," என்று, தீர்மானத்தை ஆதரித்து, தேவகி நந்த் நாராயணன் கூறினர்.

"நாட்டின் எல்லாப் பாகங்களிலும் மில்கள் பரவினால் கைத்தறிகள் நசித்துவிடும்; ஆனால், இதில் தனித்தனி நபர்களை அனுமதிக்கக் கூடாது," என்று என். ஆர். மல்கானி கூறினர்.

"துணி விசாரணைக் குழு கைத்தறித் தொழில் பிரச்சினையில் அனுதாபம் காட்டவில்லை; அக்குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டால் இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலையில்லாமற் போய்விடும்," என்று டி. எஸ். பட்டாபிராமன் சொன்னர்.

"செலவு அதிகமானால்கூட கைத்தறிகளை ஆதரிக்க வேண்டும்" என்று, முகம்மது இஸ்மாயில் குறிப்பிட்டார்.

"கைத்தறிகள் மூலம் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்," என்று என். ஜி. ரங்கா குறிப்பிட்டார்.

'மில் உற்பத்தி பூராவையும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, கைத்தறி உற்பத்திகளை இந்தியாவில் செலவிடவேண்டும்," என்று, பிருதிவிராஜ் கபூர் கூறினர்.

கைத்தொழில் இலாகா மந்திரி விவாதத்திற்குப் பதிலளிக்கையில், மில் துணி உற்பத்திக்கு வரம்பு கட்டுவதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், மில் உற்பத்தி 500 கோடி கெஜத்துக்கு மேல் போவதையும் ஆதரிக்கவில்லை யென்றார்.

'ஒருவருக்கு 18 கெஜம் என்ற கணக்கில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 820 கோடி கெஜம் துணி, நமக்குத் தேவையாயிருக்கும்; மீதமுள்ளதைக் கைத்தறிகளில் உற்பத்தி செய்துவிட முடியுமாவென்பது சந்தேகமாய்த்தானிருக்கிறது"

மொழிவழி மாநிலம்

பனம்பள்ளியின் பரவசம்

"உலகமெங்கணும், சதுரமைலுக்கு 300 பேருக்கு மேல் குடியிருக்கவில்லை; அப்படிப்பட்ட மக்கள் தொகை இங்கிருக்குமானால், நமது பூமி 'சொர்க்க பூமி'யாக இருந்திருக்கக் கூடும்; ரஷ்யாவில், சதுரமைலுக்கு 28 பேர் இருக்கின்றனர்; ஆனால், திரு-கொச்சியில், சதுரமைலுக்கு 1,000 பேர் வீதம் உள்ளனர்; எந்த நாட்டிலாவது இவ்வளவு மக்கள் தொகை உண்டா?"

என்று, திரு-கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் கொல்லத்தில் கூறியுள்ளார்.

மேலும் அவர் சொன்னர் :—

"தொழிலின்மை, வறுமை ஆகியவைகளை உடன் கொண்டுள்ள $1\frac{1}{2}$ கோடி கேரள மக்களுக்கென தனி மாநிலம் உருவாகி வருகிறது; என்னவாயினும்சரி — மனச்சாட்சியோடும், மன தைரியத்தோடும் மக்கள் செயல்பட்டால், அதைப் பெறுவது பெரிய காரியமல்ல; ஆட்சி வசதியை முன்னிட்டே, கேரள மாநிலம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது."

"மாநிலங்கள் மாற்றி அமைக்கப்படுவதினால், நமக்குள்ள சுதந்திரம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாது; இந்தியாவின் மற்ற பாகங்களில் வசிக்கவோ, வியாபாரம் நடத்தவோ, சட்டப்படி எந்த விதத் தடையும் நமக்கு ஏற்படாது"

★

தலைநகர் தகராறு?

"கேரள மாநிலத்தின் தலைநகரம் திருச்சூரில் அமைய வேண்டும்," என்று, திருச்சூர் நகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★

'வாக்கெடுப்பு நடத்திப் பார்க்கட்டும்'

"திரு-கொச்சியின் 9 தமிழ் தாலுக்காக்களிலும் உள்ள மக்கள் தி. த நா. காங்கிரசின் பின்புறத்தில் உள்ளனர்; அப்பகுதிகள் சென்னையுடன் இணைவது வரையில் நாங்கள் ஓய்ந்திருக்கமாட்டோம்; வேண்டுமானால், இப்பிரச்சினையை முன்னிறுத்தி வாக்கெடுப்பு நடத்திப் பார்க்கட்டும்,"

என்று, தி. த நா காங்கிரஸ் தலைவர் எ. நேசமணி குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னர் :—

"இதற்கிடையில், இப்பொழுது கிடைக்கும் தாலுகாக்களைப் பெற்றுக்கொண்டு, தொடர்ந்து மீதமுள்ள தாலுகாக்களுக்காகக் கிளர்ச்சி செய்வோம்,"

'நியாயமிருந்தாலும் அதைப் பாழ்படுத்துவதா?'

அமெரிக்க பத்திரிகை எச்சரிக்கை

புதுடில்லி, செப். 16—

'கோவாவை விடுவிக்க' என்று கூறி, இந்தியர்கள் கோவா எல்லைக்குள் 'சத்தியாக்கிரகம்' செய்ய முற்படுவதைப் போல, 'காஷ்மீரை விடுவிக்க' என்று கூறி, பாகிஸ்தானில் அதே 'சத்தியாக்கிரகத்தில்' ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுவதாகத் தெரிகிறது. ஏற்கனவே, இந்தியத் தூதுவராலுவலகத்தின்முன் பாகிஸ்தானியர் 'சத்தியாக்கிரகம்' துவங்கியுள்ளனர்.

பாகிஸ்தானியர் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ள இந்த காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை, கோவா போராட்டத்தைக் கண்டித்தது போலவே, மேலை நாட்டுப் பத்திரிகைகள் கண்டித்திருக்கின்றனவாம்.

"காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் பக்கத்தில் ஓரளவு நியாயம் இருக்கிறது; ஆனால், திட்டமிடப்பட்டுள்ள எல்லை நுழைவு, அந்த நியாயத்தைப் பாழ்படுத்திவிடக் கூடாது,"

என்று, 'நியூயார்க் டைம்ஸ்' எழுதியுள்ளதாம்.

இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதாம்!

தாழ்த்தப்பட்டவர் நலன்களைக் கவனிக்க தனி இலாகா தேவை இல்லையாம்!

இந்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் கூற்று

புதுடில்லி, செப். 16—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கான மானியம் வழங்க முயற்சித்து வருகிறேன்;

"தெருக்கூட்டும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில் மிகக் கொடுமையாக நடத்தப்படுவது கேட்டு வருந்துகிறேன்;

"அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்கிற நகரசபைகள், அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகளைச் செய்து தருவது இன்றியமையாததாகும்;

"குப்பைக் கூளங்களை அவர்கள் தலையில் சுமந்து செல்லும் கொடுமையை ஒழிக்க ஏதேனும் சட்டம் செய்யப்பட வேண்டும்;

"இப்போதிருப்பதைக் காட்டிலும் அடுத்து உருவாகும் மக்கள் சபையில், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக இன்னும் அதிகமான உறுப்பினர்கள் இடம் பெறுவர்;

"எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனி இலாகா ஒன்று மத்திய சர்க்காரில் தேவை இல்லை என நினைக்கிறேன்; ஆலோசனைக் குழுக்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்' என்பதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளும்,"

என்று, இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் மக்கள் சபையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நல அதிகாரியின் அறிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், "அமெரிக்கா இன்னும் நீக்ரோவர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடாமலிருக்கும் போது, இந்தியா, காந்தியாரின் ஆர்வமூட்டும் வழியைப் பின்பற்றி தீண்டாமையை ஒழிக்க முனைந்து விட்டது" என்றும் கூறியிருக்கிறார்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட காளை மாடு!

லக்னோ, செப். 16—

காளை மாடு ஒன்றுக்கு சிறைத் தண்டனை தரப்பட்டது பற்றிய விவாதம் உத்திரப் பிரதேச சட்டசபையில் நடைபெற்றிருக்கிறது.

"ஒரு நீதிபதி, ஒரு காளை மாட்டுக்குச் சிறைத் தண்டனை தந்து தீர்ப்பளித்ததும், ஆனால், சிறை அதிகாரிகள் காளை மாட்டினை சிறைக்குள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதும் உண்மையா?" என்று ஒரு உறுப்பினர் கேட்டார்.

உதவி சிறை இலாகா மந்திரியான முசாபர் உசேன், 'சர்க்கார் கால்நடை பராமரிப்பு இலாகாவிற்குச் சொந்தமான காளை மாடுதான் தண்டனை பெற்றது,' என்று தெரிவித்திருக்கிறார்

அந்த மாடு, கண்ட கண்ட இடங்களில் எல்லாம் தேடுவாரற்று சுற்றிக்கொண்டிருந்ததாயும், அதனை சொந்தக்காரர் வந்து கூட்டிச் செல்லும் வரை சிறையில் வைத்திருக்குமாறும் எட்டா மாவட்டத்தைச் சேர்ந்த நீதிபதி உத்தரவிட்டதாயும் தெரியவருகிறது.

மேலும், அந்த மாவட்ட நீதிபதிக்கு சர்க்கார் உள்நாட்டிலாகா உதவிச் செயலாளர், 'எந்த ஒரு நீதிபதிக்கும் மிருகங்களை சிறையில் வைக்கும் அதிகாரம் இல்லை,' என்று எடுத்துக்காட்டியிருக்கிறார் என்றும் சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்சொத்தாகக் கருதப்படும்!

புதுடில்லி, செப் 15—

ராஜ்யங்களின்சபையில் கேள்வி நேரத்தின்போது, 'ஐரோப்பியப் பகுதிகளில் சமீபத்தில் பிரதமர் நேரு சுற்றுப் பயணம் செய்த போது, அந்நாடுகளின் சர்க்கார்கள் அவருக்கு அளித்த வெகுமதிகள் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டு, பொருட் காட்சிச் சாலைகளிலும், இதர சர்க்கார், கட்டிடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன,' என்று, உதவி வெளிநாட்டு மந்திரி தெரிவித்துள்ளார்.

"மத்திய சர்க்காரிலும், மாநிலங்களிலும் உள்ள இதர மந்திரிகளும் இதே மாதிரி செய்கிறார்களா?" என்று கேட்கப்பட்டபோது, 'அந்தக் கேள்வியை இங்கு கேட்பதற்கில்லை,' என்று சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

பர்மா நாணய நோட்டுகள் இறக்குமதி

புதுடில்லி, செப். 15—

"புதிதாக வெளியிடப்பட்டுள்ள பர்மா நாணய நோட்டுகள் மாத்திரமே இந்தியாவுக்குள் கொண்டுவர அனுமதிக்கப்பட்டு வருகின்றன. இந்த நோட்டுகளை எவ்வளவு வேண்டுமானாலும் கொண்டுவரலாம்; ஆனால், இந்தியா வந்து சேர்ந்தவுடன், இவைபற்றிய விவரங்களைத் தெரிவித்தாக வேண்டும்," என்று ராஜ்யங்கள் சபையில், நிதி மந்திரி தெரிவித்துள்ளார்.

தீண்டாமை ஒழிப்பு...

சர்க்கார் பிரச்சார சினிமாப் படம் தயாரிக்கிறது

புதுடில்லி, செப். 16—

தீண்டாமை ஒழிப்புக்காகப் பிரச்சாரம் செய்யும் வகையில் சினிமாப் படங்கள் தயாரிக்க சர்க்கார் திட்டமிட்டிருப்பதாக மக்கள் சபையில் மந்திரி கேஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே ஒரு படம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதாகவும், இன்னுமொரு படம் தயாரிப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் படங்கள் ஆங்கிலம், இந்தி, வங்காளி, தமிழ், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளிலும் தயாரிக்கப்படும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இந்திய சர்க்காருக்கு 'காண்டிராக்டர்'கள் எதிர்ப்பு

இலட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை இழக்க நேரிடுமாம்!

புதுடில்லி, செப். 16—

இரயில்வே நிலையங்களில், இரயில்வே இலாகாவே சிற்றுண்டிச் சாலைகளை நடத்தும் யோசனையை, இரயில்வே சிற்றுண்டிச்சாலை காண்டிராக்டர்கள் எதிர்த்துள்ளனராம்!

6,000-த்திற்கும் அதிகமான காண்டிராக்டர்கள் தற்சமயம் உள்ளனர் என்றும், இம்முறையை ரத்து செய்தால் இலட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை இழக்க நேரிடுமென்றும், அனுபவமில்லாமல் இலாகா ரீதியாக அவற்றை மேற்கொண்டு செயலாற்றுவது வெற்றி பெறாது என்றும் பல்வேறு மந்திரிகளுக்கும் அவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்திக்கு 'இடி!'

பல்கலைக் கழக ஆசிரியர்கள் எதிர்ப்பு!

'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்,' அகில இந்தியத் தேர்வுகளுக்கு கட்டாயமாக இந்தியைப் புகுத்துவதற்கு, சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' எதிர்ப்பு தெரிவித்ததல்லவா?

பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்க விசேட மாநாடு, எஸ்பிளனேட் ஒய். எம் சி. ஏ மன்றத்தில், வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி முதல்வரும், சங்கத் தலைவருமான பேராசிரியர் எம். சே. சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது, பல்கலைக் கழக 'சிண்டிகேட்'டின் 'நிலை'யை ஆதரித்துள்ளது.

"பல்கலைக் கழகப் படிப்பின் 'தரம்' பெரிதும் குறைந்துவிட்டது வருந்தத் தக்க ஒன்றாகும்," என்று தலைவர் குறிப்பிட்டார்.

வேகம் கூடாது!

சென்னை, செப். 15—

சாகுபடிக்கும், மற்ற விவசாயக் காரியங்களுக்கும் இயந்திரங்களை மெதுவாகத்தான் உபயோகிக்க வேண்டும்; விவசாயத் துறையில் இயந்திரங்களை உபயோகிப்பதால் வேலையில்லாமல் போகும் மற்றவர்களை வேலைகளில் எடுத்துக் கொள்ள தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; ஆனால், இப்பிரச்சினையில் அதிக வேகமாகப் போகக்கூடாது," என்று அமெரிக்க விவசாய,நாட்டிலாகா கமிட்டியின் தலைவர் திரு எல்லெண்டர்எச்சரித்தார்.

"இந்தியாவில் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன; எனவே, உற்பத்தியைப் பெருக்க இந்தியா பெரு முயற்சி செய்யவேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

மண்ணோடு மண்ணாகிய 'மாதிரி கிராமம்!'

"ஆஸ்திரிய நிபுணரொருவர் 'மாதிரி கிராமம்' ஒன்றை அமைத்தார்; ஆனால், முதல் மழையிலேயே அவர் நிர்மாணித்த கிராமம் முழுவதும் இடிந்துவிழுந்து, மண்ணோடு மண்ணாகிவிட்டது," என்று மக்கள் சபையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கழகச் செய்திகள்

இராமச்சந்திரபுரம் தி. மு. கழகத் துவக்க விழா

4—9—55 அன்று, தோழர் எஸ். வி. பதி தலைமையில் சிராமபுரம் கலா நாடக மன்றத்தில் நடைபெற்ற இராமச்சந்திரபுரம் தி. மு. கிளைக் கழக அமைப்புக் கூட்டத்தில், தோழர் வீ. முத்துவைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் ப. செல்வராசன் தி. மு. கழகத்தின் கொள்கை பற்றி அறிவுரை வழங்கினர்.

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகம்

14—9—55-ல் நடைபெற்ற கழக அவசரச் செயற் குழுக் கூட்டத்தில், தோழர் ஆர். சந்தானம் அவர்களின் திடீர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், கிளைக் கழகத் துணைச் செயலாளர், மற்றொரு கழகப் பொது உறுப்பினர் ஆகியோரது விலகலை ஏற்றுக் கொண்டும், அக்டோபர் திங்களில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், அடுத்த பொது உறுப்பினர் கூட்டத்தில் துணைச் செயலாளர் தேர்தல் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தொட்டம்பாளையம் தி. மு. கழகம்

2-ம் ஆண்டு நிறைவு விழா

11—9—55 காலை 8 மணியளவில், மேற்படி விழாவையொட்டி ஊர்வலம், கொடியேற்ற விழாவும் மாலை 3 மணிக்கு பஸ் நிலையத்தில், தோழர் சி. பீ. சிற்றரசு அவர்களுக்கு மாபெரும் வரவேற்பும் அளிக்கப்பட்டது. அன்று மாலை 6-30 மணிக்கு பாண்டியன் மைதானத்தில் தோழர் ஆர். சுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஆர். எஸ் மணி, சத்தி-வேலவன், பி. எஸ். பன்னீர்செல்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் திராவிடம் பிரியவேண்டியதின் அவசியம் பற்றியும், சமுதாயச் சீர்திருத்தம் பற்றியும் நீண்டதோர் உரையாற்றினர்.

தி. மு. க. கிளைகளுக்கு வேண்டுகோள்

"1956-ம் ஆண்டு திராவிடர் நாட் குறிப்பில் (டயரியில்) தி. மு. கழகக் கிளைகளின் விவரங்களை வழக்கம்போல் வெளியிட இருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகத்தின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் இவர்களின் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும், 5-10-55-க்குள் 'போர்வாள், 147, பவழக்காரத் தெரு, சென்னை-1" என்ற முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் வேண்டிக் கொள்ளப் பெறுகிறார்கள்."

என்று, 'போர்வாள்' பொறுப்பாளர் தெரிவிக்கிறார்.

ஏஜெண்டுதோழர்கட்கு முக்கிய அறிவிப்பு

★

'நம் நாடு' இதழ்களை இதுகாறும் தங்கள் தங்கள் முகவரியிலேயே தபால்காரர் மூலம் பெற்றுவந்த ஏஜெண்டுத் தோழர்கள், இனி, தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தபால் அதிகாரிகள் அறிவித்திருப்பதையொட்டி, ஒவ்வொரு பார்சலின்மேலும், 'To be Delivered at Window' என்று எழுதி அனுப்பப்படுகிறது.

எனவே, தபால்மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத் தோழர்கள் அனைவரும், இனி தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திற்கே நேரில் சென்று, 'நம் நாடு' இதழ்க் கட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-13 }
15—9—55 } பொறுப்பாளர் 'நம் நாடு'.

பழமையும்-புதுமையும் தோழமை பூண்டன!

பிலானி (இராஜஸ்தான்)—

இராஜஸ்தான் பாலைவனத்தின் நடுவிலுள்ள இந்த ஊர், பாலைவனச் சோலைபோலக் காட்சியளிக்கிறது.

புல் வெளியும் பூங்காவும், அழகான குடிசைகளும், பள்ளிகளும், கல்லூரிகளும் நிரம்பிய 400 ஏக்கர் கல்வி நிலையம் இங்கு ஒரு புதுமையாக விளங்குகிறது

பண்டைய குருகுல வாசத்தின் கடுமையும்—இன்றைய அமெரிக்கப் பல்கலைக் கழகத்தின் இனிமையும் ஒருங்கே கலந்த கல்வி முறையைக் கைக்கொண்டுவிளங்குகிறது பிர்லா எஞ்சினீயரிங் கல்லூரி.

இங்கே நகரங்களின் இரைச்சல் இல்லை; சினிமா கொட்டகைகள் இல்லை; அணிபெருத்த உணவுச் சாலைகள் இல்லை; மாணவர்கள் கருத்தைச் சிதறவிடாமல் ஊன்றிப் படிக்கத் தக்க சூழ்நிலை இந்த இடத்தைக் குடிகொண்டு விளங்குகின்றது.

4,000 மாணவ—மாணவியர் எஞ்சினீயர்களாகவும், பொருளியல் நிபுணர்களாகவும், ஆராய்ச்சி வல்லவர்களாகவும், துரைத்தனச் சிற்பிகளாகவும் கலை பயிலும் அரியதோர் கலைநிலையமாகத் திகழ்கிறது.

கல்லூரி தொடங்கி ஒன்பதே ஆண்டுகள் ஓடியுள்ளன; ஆயினும், கிழக்கே-பர்மா, மலேயா, இந்தோனேசியா இவற்றிலிருந்தும், மேற்கே-பாகிஸ்தான், ஆப்பிரிக்கா இவற்றிலிருந்தும் பலர் வந்து அங்கு படிக்கின்றனர்; அங்கு படித்துப் பட்டம் பெற்ற 700-எஞ்சினீயர்கள் இந்திய நாட்டை வளப்படுத்தும் பல்வேறு திட்டங்களிலும் தொழில் துறைகளிலும் பணியாற்றுகிறார்கள்.

இக் கல்விப் பசுஞ்சோலையில் வாழ்க்கை வசதி யாவும் உண்டு; அதற்கென மின்சார நிலையம் இருக்கிறது; குடிதண்ணீர்க் குழாய் வசதி உள்ளது; காய்கறித் தோட்டங்களும், பால் பண்ணையும் உள்ளன; பிர்லா கல்வி டிரஸ்ட் ஏற்படுத்திய குழாய்க் கிணறுகளால், அங்கு இரண்டு பர்லாங் நீளத்துக்கு 'சிவகங்கை' அழகாக ஓடுகிறது.

இந்தியா நடவடிக்கை எடுக்குமாம்!

"எந்த நாடுகளை ஐ. நா.-வில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமென்று பாண்டுங் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியதோ அந்நாடுகள்மட்டுமன்றி, ஐ. நா. சாசன நிபந்தனைகளுக்குள் வரும் எல்லா நாடுகளையுமே ஐ. நா.-வில் சேர்ப்பதில் இந்தியாவுக்கு அக்கறை உண்டு; ஆகவே, ஐ. நா.-வை, எல்லா நாடுகளும் கொண்ட நிறுவனமாக்க எல்லா இராஜதந்திர நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்துவருகிறது," என்று, மக்கள் சபையில் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

பெயர் சூட்டல்

14—9—55ல், சென்னை மண்ணடி, தோழர் பொ. டிக்காராம் அவர்கள் துணைவியார் தோழியர் பி. ராணியம்மையார், ஒரு பெண் மகவுக்குத் தாயானார். அக்குழந்தைக்கு 'கனிரசம்' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

மறைவு

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எருக்கலைப்பட்டி தோழர் து. ப. சுடலைமுத்து (து. ப யோகான்) தமது 65-வது வயதில், பம்பாய்—தாராவியிலுள்ள காந்தாரியர சால் 3-வது எண் இல்லத்தில், 8—9—55-ல் காலன்று இயற்கை எய்தினர். அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் உறவினருக்கு நமது அனுதாபம் உரித்தாகுக. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அர்ஜண்டைனு தலைநகரில் குண்டுவீச்சு

மீண்டும் இராணுவத்தினர் கலகம்

பியூனஸ் அயர்ஸ், செப். 18—

'பெரான் தலைமையில் உள்ள அர்ஜெண்டைனு சர்க்கார் பதவியிலிருந்து விலகவேண்டும்,' என்று 'புரட்சி'க்காரர்கள் நிர்ணயித்திருந்த கெடு முடிந்துவிட்டதால், அவர்கள் இன்று அர்ஜெண்டைனு தலைநகர் மீது குண்டு வீச்சுத் துவங்கியிருக்கின்றனர்.

மேலும், இராணுவ கப்பல் படையில் உள்ள 'புரட்சி'ப் பிரிவினர் தந்துள்ள இறுதி எச்சரிக்கையை பெரான் சர்க்கார் ஏற்றுக்கொள்ளா விட்டால் அர்ஜெண்டைனு தலைநகர் மேலும் குண்டு வீச்சிற்கு ஆளாக நேரிடும் என்று கூறப்படுகிறது.

'புரட்சிக்காரர்கள்' வசம் ஐந்து மாகாணங்கள் சிக்கிவிட்டதாயும், அவர்கள் தலைநகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையில், விசுவாசம் மிக்க இராணுவத்தினர், 'கலக'த்தில் ஈடுபட்டுள்ள துருப்புகளின் கொட்டத்தை அடக்குவதில் வெற்றி பெற்றுள்ளதாயும், இன்னுஞ்சில இடங்கள் மட்டுமே புரட்சிக்காரர் வசமிருப்பதாயும் கூறுகிறதாகத் தெரிகிறது.

சென்னையில் திராவிட நாடு பிரிவினை நாள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எஸ். பாண்டியன் சிறிதுநேரம் பேசினர்.

அடுத்து, இரயில்வே தொழிலாளர் சார்பில் தோழர் முகில் வண்ணான் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இரயில்வே தொழிலாளர்களாகிய நாங்கள் நாட்டில் உள்ள பல அரசியல் கட்சியினரின் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்து வருகின்றோம் ;

"பல அரசியல் கட்சியினரும், தொழிலாளர் சங்கங்களில் தொழிலாளர் நலன்களுக்குப் பாடுபடுவதாகக் கூறி ஈடுபடுகின்றனர் ; தொழிலாளர்களுக்கு ஓரளவு அவர்கள் பாடுபட்டபோதிலுங்கூட, தாங்கள் கைப்பற்றிய தொழிற் சங்கங்களை தங்களின் கட்சிக்கு ஆக்கம் தேடவும், கட்சி செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் மட்டுமே பயன்படுத்துகின்றனர் ;

"தி. மு. கழகம்தான், நாட்டு மக்கள் எல்லோருடைய பொதுவான முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிற கட்சியாக இருக்கின்றது. தி மு. கழகம், தனது தலைவர்களையோ, முன்னணி வீரர்களையோ தொழிற்சங்கங்களைக் கைப்பற்றி, கழகத்திற்கு ஆக்கமும் செல்வாக்கும் தேடுமாறு கூறவில்லை—கடந்த ஆறாண்டுக் காலத்தில் ; ஆனாலும், தொழிலாளர் சங்கங்களில் அங்கம் பெறாமலேயே தொழிலாளரின் நலன்களுக்கு இடைவிடாது உழைத்துவரும் கட்சியாக தி. மு. கழகம் இருந்து வந்திருக்கிறது ;

"மேலும், வேறு பல அரசியல் கட்சியினர், 'முதலாளி—தொழிலாளி என்ற வர்க்க பேதத்தை ஒழித்துவிட்டாலே போதும்,' என்று எண்ணுகின்றனர் ; அவர்கள், தொழிலாளர்களிடை நிலவும் சாதி வேறுபாட்டை—மூடப் பழக்கங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இன்றைக்கு இருபதாண்டுக்கு முன்பாக, நான் பணியாற்றிய தொழிற்சாலையில், தாழ்த்தப் பட்டவர்கள், இதர வகுப்பினர் தண்ணீர் குடிக்க உபயோகிக்கும் குவளையை உபயோகிக்க முடியாது ; தனியாகத் தகரக் குழாய் வழியாக வரும் நீரையே அவர்கள் அருந்தவேண்டும் — என்ற நிலை இருந்தது ; அப்போதும் தொழிற் சங்கங்களிருந்தன ; அவற்றில், பல அரசியல் கட்சித் தலைவர்களும், ஈடுபட்டிருந்தனர் ; என்றாலும், அந்த அரசியல் தலைவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தொழிற்சாலையில் காட்டப்பட்ட பேதத்தை —இழைக்கப்பட்ட கொடுமையைக் களைய வாய் திறந்ததுமில்லை—முயற்சித்ததும் கிடையாது.

"இந்த இழிநிலையும், இவை போன்ற கொடுமைகளும் ஒழிக்கப்பட திராவிடர் இயக்கம்தான் நாட்டில் இடைவிடாது பாடுபட்டு வந்திருக்கிறது ;

"மேலும், இன்று கூட எங்கள் பெரம்பூர் இரயில்வே தொழிற்சாலையில், 'பிள்ளையார் பூசை'க்கு விடுமுறை தருவதற்காக ஒரு திடீர் போராட்டம் நடத்தப்பட்டது ; 20-ந் தேதியன்று அதற்கென விடுமுறை இருந்தது ; கேட்டபடி தரப்பட்டது ; ஆனால், பஞ்சாங்கப்படி, பிள்ளையார் பூசை 19-ந் தேதி என்றதும், தொழிற் சங்கத் தலைவர்கள் அதிகாரிகளை அணுகி, 'விடுமுறையை 19-ந் தேதியாக்க வேண்டும்,' என்று கேட்டனர் ; அதிகாரிகளின் பதில் சாதகமானதாக இருக்கவில்லை என்பதால், உடனே வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென தொழிலாளர்கள் கேட்கப்பட்டனர் ; என்னை, தொழிலாளர் சங்கத் தலைவர்கள் கேட்டபோது. நான், 'எனக்குப் பிள்ளையார் பூசையே கிடையாது ; பிள்ளையாரையே ஏற்றுக் கொள்ளாதவன் நான் ; எனவே, விடுமுறையே எனக்குத் தேவை இல்லை என்று நினைக்கிறேன் ; அப்படியிருக்கும்போது, என்றைக்கு விடுமுறை என்றால் என்ன? எனக்கு அது பற்றிக் கவலை இல்லை,' என்றேன் ; தலைவர்கள் நான் கூறியதை ஏற்க மறுத்துவிட்டு, வற்புறுத்தி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடச் செய்திருக்கிறார்கள்.

"இந்த நிலையில்தான் இன்றைய தொழிற் சங்கங்கள் இருக்கின்றன ;

"எனவே, தொழிலாளர்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்ட தி. மு. கழகம், வரும் மாநில மாநாட்டில் தொழிலாளர் நலனுக்கு—அவர்களுக்குப் பணிபுரிவதற்குகந்த நல்ல பல திட்டங்களைத் தீட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் ;

"தி. மு. கழக மாநில மாநாட்டிற்கு இரயில்வே தொழிலாளர் சார்பில் ஒரு சிறு தொகையை நிதியாகத் தருகிறோம் ; அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அண்ணா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

அடுத்து நிதி வழங்கிய தோழர் அவையரசு என்ற இரயில்வே தொழிலாளி, தாங்கள் வழங்கும் இந்தச் சிறு தொகையான ரூ 524-9-2-ம், பேசும் ஆற்றல் பெற்றிருந்தால் தி. மு க.-விடம் ரயில்வே தொழிலாளர்கள் எத்தனை அன்பும், பற்றும், ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறும்," என்று குறிப்பிட்டார்

கூட்டத்தில் அண்ணா அவர்களுக்குப் பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மாநில மாநாட்டிற்கு அளிக்கப்பட்ட நிதி விபரம் :—

பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்	ரூ 524—9—2
அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர்	ரூ. 27-4-0
புளியந்தோப்பு ஜோசப் நினைவு நூல் நிலையம்	ரூ. 25—0—0
செம்பியம் இந்தியா பிஸ்டன் தொழிலாளர்	ரூ. 22—4—0
தோழர் முனுசாமி (காலணாக்களாக)	ரூ. 2—0—6
தோழர் கிருஷ்ணன்	ரூ. 1—0—0

* * *

பெயர் சூட்டல்

தோழர் பி. எஸ். லிங்கம் அவர்கள் பெண் குழந்தைக்கு அண்ணா அவர்கள் 'தேன்மொழி' என்று பெயர் சூட்டியதற்காக ரூ. 1 'நம் நாடு' வளர்ச்சிக்குத் தரப்பட்டது —பெற்றுக்கொண்டோம் —நன்றி —பொறுப்பாளர்.

* * *

இறுதியாக அண்ணா அவர்கள் அரியதோர் கருத்துரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் ஏராளமான தாய்மார்கள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். (ந-கி.)

டிட்டோ ரஷ்யா வருகை

மாஸ்கோ, செப். 18—

யூகோ தலைவர் மார்ஷல் டிட்டோவை ரஷ்யாவிற்கு வருகை தருமாறு அழைப்பது குறித்து இங்குள்ள யூகோ தூதுவருடன் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் தோழர் நிகிதா குருஷ்சேவ் கலந்தாலோசித்ததாகத் தெரிகிறது.

நேற்று இதுபற்றி, மார்ஷல் புல்கானின் யூகோ தூதுவரிடம் பேசியதாகவும் கூறப்படுகிறது.

மக்கள் 'விழிப்பு'க்கு ஒரு உதாரணம்?

அதிகாரிகள் ஏமாற்றம்!

நாசிக், செப். 18—

செவ்வாயன்று நடைபெறவிருக்கும் 'சிம்ம மேளா'வையொட்டி, ஒரு விசேட இரயில் இங்கு வந்து சேர்ந்தது ; இரயிலில் ஏராளமான மக்கள் கூட்டம் இருக்குமெனக் கருதி, முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக உயர்தர மாவட்ட, மேளா விழா அதிகாரிகள் இரயில்வே நிலையத்திற்கு வந்திருந்தனர் ; ஆனால், வண்டியிலிருந்து இறங்கினவர்கள் நான்கு பிச்சைக்காரர்கள்தான்!

பூனாவிலிருந்தும் வந்த ஒரு விசேட இரயிலில், 64 பேர்கள் தான் இருந்தனர் ; அவர்களில் 24-பேர் 'பிச்சைக்காரர் வகை'யைச் சேர்ந்தவர்களாம்!

போதுமான பிரயாணிகள் இல்லாததால், இரயில்வே அதிகாரிகள், மேளா விசேட இரயில்களை 'ரத்து' செய்துவிட்டனராம்!

அணு யுகத்திலும் இந்தக் 'காட்சி'யா?

கரீம்கஞ்ச் (அசாம்), செப். 19—

இங்குள்ள அச்சகம் ஒன்றில், திடீரென அச்சு இயந்திரம் ஒன்று பழுதடைந்துவிட்டதாம்.

இந்த இயந்திரத்தைச் சரிப்படுத்துவதற்காக, அச்சிடுபவர்கள் சிலர், மந்திரங்கள் ஓதி, 'புனித நீராடு' செய்தனராம்!

பின்னர், துளசிச் செடியின் இலைகளால், 'புனித நீரை'க் கொண்டு அந்த இயந்திரத்தைக் கழுவி மந்திரங்களை ஓதினராம்!

ஏதோ 'தீய சக்தி'கள் அந்த இயந்திரத்தைப் பீடித்திருக்கின்றன என்பது, அவர்களின் அபிப்பிராயமாம் ; ஆனால், இந்தச் செய்கைகளுக்கும் அப்பால் பழுதுபட்ட அந்த இயந்திரம் சரியாகிவிட்டதா என்பதைப் பற்றிச் செய்திகள் ஒன்றும் அறிவிக்கவில்லை.

நியாயமான கூலி நிர்ணயக் 'கழகம்'

புதுடில்லி, செப். 18—

நாட்டில் உள்ள ஒவ்வொரு முக்கியமான தொழிலிலும் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி நிர்ணயிப்பதற்காக, ஒரு 'கழகம்' அமைக்க வேண்டும் என்று திட்டக் குழுவின் தொழில் பிரிவுக் குழுக் கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது

நாடெங்கும் பிரிவினை முழக்கம்

★

பூவிருந்தவல்லி
சன்னதித் தெருவில்
20—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: வா.வே. இராமச்சந்திரன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
மு. புரட்சிமணி
என். ஏ. ரசீத்

★

சைதாப்பேட்டை
காரணீஸ்வரர் கோவில் தெரு
தேரடி மைதானத்தில்
20—9—55 மாலை 6½ மணிக்கு
தலைவர் : எஸ். ராஜவேலு
பேசுவோர்:
என். வி. நடராசன்
இளம்பரிதி

★

குன்றத்தூர்
21—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. கே. சிவகுமாரன்
பேசுவோர் :
கண்ணதாசன்
சைதை சம்பந்தம்

★

வெஞ்சமடை
வள்ளுவர் திடலில்
21—9—55 மாலை 6½ மணிக்கு
பேசுவோர் :
டி. கே. தாமரைச்செல்வன்
ஆ. காளிமுத்து

★

ஆலங்கோட்டை
மாரியம்மன் கோயில் எதிரில்
21—9—55 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
இரா. சு. தங்கப்பழம்
த. வ. தங்கையன்
ப. நாராயணசாமி

★

முகவூர்
22—9—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
எம். எஸ். ராமசாமி
சலிங்கன்

★

நல்லமங்கலம்
23—9—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
தில்லை வில்லாளன்

பழனி வட்டார தி.மு.கழகத் தோழர்கட்கு

21—9—55 காலை 10 மணிக்கு, தோழர் ச. இராசகோபால் பங்களாவில், பழனி வட்டார தி. மு. கழக அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும்.

இலங்கை (கொள்ளுப்பிட்டி) தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

24—9—55 அன்று, இலங்கை தி.மு கழக கொள்ளுப்பிட்டி கிளையின் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். கழக மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு இடம், நாள், தலைவர், திறப்பாளர், சொற்பொழிவாளர்கள், தீர்மான ஆய்வுக் குழு தேர்ந்தெடுத்தல், மற்றும் பல பிரச்சினைகள் பற்றி ஆலோசனை செய்யப்படும்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் மாயூரம் வருகை

21—9—55 மாலை 6 மணிக்கு, மாயூரம் நகரப் பூங்காவில், பொதுச்செயலாளர் வரவேற்பும், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும் தோழர் இரே. ஜோசப் தலைமையில் நடைபெறும். தோழர்கள் நாதன், என். கிட்டப்பா ஆகியோர் வரவேற்புரையாற்றுவர். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 3½ மணிக்கு, மாயூரம் முசாபரி பங்களாவிலிருந்து பொதுச்செயலாளர் அவர்கள் தோழர் து காசிநாதன் தலைமையில் நகரப் பூங்காவிற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப் படுவார்.

மாலை 5 மணிக்கு, தோழர் பி டி. ராசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

திரு. வி. க. நினைவு நாள்

20—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை—ஆயிரம் விளக்கு, அஜீஸ்முல்க் 5-வது தெருவில், தோழர் எஸ். எஸ். தென்னரசு தலைமையில் நடைபெறும். திரு. வி. க. படத்தை தோழர் கண்ணதாசன் திறந்துவைப்பார். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். ராமசாமி, ஜி. முத்துகிருஷ்ணன், கா. அ. இந்திரவேலு, கே. மறைமலை ஆகியோர் பேசுவர்.

மணப்பெண்ணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரதட்சிணை வாங்குவது அல்லது கொடுப்பது, மற்றும் அப்படிச் செய்வதாக ஒப்பந்தம் செய்துகொள்வது இவற்றைச் சட்ட விரோதமாக்குவது; 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இக்குற்றம் புரிந்தால் ஒரு ஆண்டு சிறைத்தண்டனையும், அபராதமும் விதிப்பது ; ஏதேனும் வரதட்சிணை தருவதாகச் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லுபடியாகாது; நீதிமன்றம் மூலம் அதனைப் பெறவும் முடியாது—ஆகியவற்றை, இம்மசோதா நோக்கமாகக்கொண்டுள்ளது.

இஸ்லாமியச் சட்டப்படி 'மஹர்' வழங்குவதையோ, மற்றும் மணப்பெண்ணுக்குப் பரிசு வழங்குவதையோ மசோதா தடை செய்யாது என்று கூறுகிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், பல்வேறு மாநிலங்களிலுமாக இதுவரை மொத்தம் 3,517 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; இந்தக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்காக, இந்திய சர்க்கார் ரூ. 10,71,45,000 கடன் தொகை அனுமதித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.